Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.241/2024

Dated 01-04-2026
Deposition of witness for : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயா | வயது | : | 42 |
| கணவர் பெயர் | : | மகேந்திரன் | தாலுக்கா | : | பாபநாசம் |
| கிராமம் | : | மேலவழுத்தூர் | தொழில் | : | விவாசய கூலி வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போதுமேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவர்.

2) ஆஜர் எதிரி சூர்யா என் வீட்டிற்கு பக்கத்துவீட்டு காரர்.

3) பொங்கலுக்கு முன்னால் தை மாதத்தில் எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் வீடு சம்பந்தமாக பிரச்சினை இருந்தது.

4) என் வீட்டுகாரரை யார் அடித்தார்கள் என்று தெரியாது.

5) இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது கடந்த 23.1.2023 அன்று மாலை 6.30 மணயிளவில் எங்கள் வீட்டிற்கு எதிரே நானும் என் கணவரும் எதிரியிடம் சென்று தொடர்ந்து எங்கள் வாசலில் சாக்கடை தண்ணீர் வருகிறது என்றும் நாங்கள் எப்படி குடியிருக்க முடியும் என்று எதிரியிடம் கேட்டபோது அதற்கு எதிரி என் கணவரை பார்த்து ஆபாச வார்த்தைகள் சொல்லி திட்டினார் என்றும்

2) வீட்டிற்கு அருகில் கிடந்த சவுக்கு விறகு கட்டையை எடுத்த இத்தோடு தொலைந்துபோடா என்று ஆபாச வார்த்தைகள் சொல்லி என் கணவரின் பின்பக்க மண்டையில் மாறி மாறி அடித்தார் என்றும் அதனால் என் கணவருக்கு ரத்த காயம் ஏற்பட்டு கத்தினார் என்றும் உடனே நாங்கள் எல்லோரும் சத்தம்போட எதிரி தப்பி ஓடிவிட்டார் என்றும் அடிப்பட்ட என் கணவரை அய்யம்பேட்டை மருத்துவமணைக்கு கொண்டு சென்று பின் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமணைக்கு கொண்டு சென்று சேர்த்தோம் என்று சொல்லிவிட்டுதற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்த பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.02 13:22:24 +0530